# கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த மனித வள மேம்பாட்டு நிறுவகம் - 2011

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மனித வள மேம்பாட்டு நிறுவகத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த மனித வள மேம்பாட்டு நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 02 ஆந் திகதி கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. கணக்குகள் கணக்காய்வு செய்யப்பட்ட பின்னர் 2012 மே 14 ஆந் திகதி வரைபு அறிக்கை வழங்கப்பட்டது. வரைபு அறிக்கையின் மூலம் ரூபா 19,487,373 இற்கான கணக்கீட்டுக் குறைபாடுகள் சுட்டிக் காட்டப்பட்டிருந்ததுடன் ரூபா 11,798,094 இற்கான கணக்கீட்டுக் குறைபாடுகள் சீராக்கப்பட்டு திருத்திய நிதிக்கூற்றுக்கள் 2012 மே 31 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 7,689,279 ஆன கணக்கீட்டுக் குறைபாடுகள் மேலும் அவதானிக்கப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளிற்கு அப்பால் மேலும் இவ்வாறான குறைபாடுகள் காணப்படுதலை கணக்காய்வில் புறக்கணிக்க முடியாதுள்ளது.

#### 1.2.2 இலங்கை கணக்கீட்டு நியமம்

ஒரு வருடத்திற்கு மேற்பட்டு நடாத்தப்பட்டு வருகின்ற பாடநெறி வருமானங்களை கணக்கீடு செய்கையில் இலங்கை கணக்கீட்டு நியம இல. 29 இன் படி அந்தந்த வருடங்களுக்குரிய வருமானங்களை இனங்கண்டு கணக்கீடு செய்யவேண்டிய போதிலும் அவ்வாறான 44 பாடநெறிகளிற்குரிய செலவினமான ரூபா 57,041,823 இற்கு சமமான தொகையொன்று மீளாய்வாண்டின் வருமானம் எனக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கல்வி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 04 பாடநெறிகளுடன் தொடர்புடைய ரூபா 7,689,279 மிகையினை வருமானச் செலவினக் கணக்கிற்கு செலவு வைப்பதற்குப் பதிலாக செலுத்தவேண்டிய மீதியொன்றாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | விபரம் |
|---|---|
| (அ) இலங்கை அரசாங்கத்தின் நிதிப்பிரமாணங்கள் 371 | மீளாய்வாண்டின் இறுதியில் சில்லறை முற்பணங்கள் கணக்கில் காணப்பட்ட ரூபா 282,659 மீதியில் 05 ஆண்டுகளிற்கும் மேலாக இணங்காணப்படாத மீதியென முன்னெடுத்து வரப்பட்டிருந்த ரூபா 197,829 மீதியினையும் 2006 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்த ரூபா 20,850 முற்பணத்தினையும் தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| நிதிப்பிரமாணம் 756 | சொத்துக்கள் மீதான வருடாந்த மெய்மையாய் வொன்றை மேற்கொண்டு தொடர்ந்துவரும் வருடத்தின் ஜனவரி மாதம் முடிவடைவதற்கு முன்னர் மெய்மையாய்வுச் சபையின் அறிக்கையினை சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் 2012 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| நிதிப்பிரமாணம் 771 மற்றும் 772 மற்றும் பல்கலைக்கழக தாபன விதிக்கோவையின் XXVI ஆம் அத்தியாயத்தின் 4 மற்றும் 5 ஆம் பிரிவு | 2010 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் அவதானிப்புகளின் படி 98 பொருள் விடயங்கள் தொடர்பில் அகற்றல் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2004 யூலை 29 ஆந் திகதிய PED/25 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கை | ரூபா 66,943,052 முதலீடுகள் தொடர்பில் திறைசேரியின் முன்அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

### 1.2.5 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

29/98, 29/98(i), 07/2007(i) மற்றும் 02/2009 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகளிற்கு முரணாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 6/2003 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் இரண்டாம் மற்றும் மூன்றாம் மொழித் தேர்ச்சிக்காக மீளாய்வாண்டில் ரூபா 79,178 செலுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டுக்கான நிறுவக செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தைக் கணக்கிலெடுக்க முன்னர் ரூபா 24,747,283 பற்றாக் குறையொன்றானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டுக்கான பற்றாக்குறை ரூபா 18,098,126 ஆக காணப்பட்மையால் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறையில் ரூபா 6,649,157 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாடிற்கான ரூபா 22,215,947 அரசாங்க மானியம் காரணமாக ஆண்டின் பற்றாக்குறை ரூபா 2,531,336 வரை குறைவடைந்திருந்ததுடன் முன்னைய ஆண்டின் ரூபா 19,000,000 அரசாங்க மானியம் காரணமாக அவ்வாண்டின் மிகை ரூபா 901,874 ஆகியது. மீளாய்வாண்டில் ஆளுக்குரிய வேதனாதிகள், வழங்கல் சேவைகள் மற்றும் பணிக்கொடை போன்ற செலவினங்கள் அதிகரித்திருந்தமையே பற்றாக்குறையின் அதிகரிப்பிற்கு விசேட காரணமாகியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

மீளாய்வாண்டில் நிறுவகத்தினால் 30 பாடநெறிகள் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன் பதிவுசெய்து கொண்டிருந்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 11,951 ஆகும். அதில் 15 பாடநெறிகள் மீளாய்வாண்டில் தொடங்கப்பட்ட பாடநெறிகளாக காணப்பட்டதுடன் அப் பாடநெறிகளிற்காக பதிவுசெய்து கொண்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை 3665 ஆகும். இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஊழிய கற்கைகள் பட்டப்படிப்பு I மற்றும் II பாடநெறிகளில் முதலாம் தவணை மற்றும் இரண்டாம் தவணை பரீட்சைகள் முறையே 2011 ஜுன் மற்றும் திசெம்பர் மாதங்களில் நடாத்தப்பட்டிருந்த போதிலும் முதலாம் தவணை பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு 2012 மே மாதம் வரை 10 மாதங்கள் தாமதம் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) Gioinformatic 02 ஆம் இலக்க பாடநெறிக்கான பரீட்சைகள் 2011 மே மற்றும் யூன் மாதங்களில் நடாத்தப்பட்டிருந்ததுடன் 2012 ஏப்ரல் 30 வரை அப்பாடநெறிக்கான பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்படாதிருந்ததுடன் அதற்கமைய பெறுபேறுகளை வெளியிடுவதற்கு 10 மாதங்களிற்கு மேல் தாமதம் ஏற்பட்டிருந்தது.

## 4. கணக்களித்தன்மை மற்றும் நல்லாட்சி

### 4.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

அரசாங்க முயற்சிகளில் நல்லாட்சிக்கான வழிகாட்டல்கள் கையேட்டின் 5.1.2 இன் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டத்தினைத் தயாரிக்கையில் ஒவ்வொரு செயற்பாட்டுடனும் சம்பந்தப்பட்ட பொறுப்புக்களை ஒவ்வொரு உத்தியோகத்தரிற்கும் வெவ்வேறாக பொறுப்பளிக்கும் விதத்தில் குறித்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புக்களை விருத்தி செய்தல், மனைப்பொருட்கள் மற்றும் கற்பித்தல் உபகரணங்களைக் கொள்வனவு செய்தல், புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகளைக் கொள்வனவு செய்தல் போன்ற செயற்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட பொறுப்புக்களை நிச்சயிக்கும் விதத்தில் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

நிறுவகத்தின் 2008, 2009, 2010 இற்குரிய ஆண்டறிக்கைகள் 2012 மே 08 ஆந் திகதி வரை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2010 ஆம் ஆண்டிற்குரிய ஆண்டறிக்கை மேற்படி திகதி வரை தயாரிக்கப்பட்டு வந்திருந்ததுடன் 2003 ஜூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கையின் படி வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் வரைபு ஆண்டறிக்கையின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் அவ்வாறு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகப் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) முற்பணங்களைத் தீர்த்தல்

(ஆ) கணக்கீடு

(இ) நிலையான சொத்துக்கள் பதிவேடு